# பிளாஸ்டிக் மாசில்லாத தமிழகம்!

## அனைவரும் ஒத்துழைக்க வேண்டுகோள்

**கோவை, டிச. 16 –**

''பிளாஸ்டிக் ஒழிப்புக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்,'' என, உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி பேசினார்.

'பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு' திட்டத்தின் மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டம், கோவை ஆர்.எஸ்., புரம் மாநகராட்சி கலையரங்கத்தில் நேற்று நடந்தது.

உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி தலைமையில் நடந்த கூட்டத்தில், பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு குறும்படம் திரையிடப்பட்டது.

அமைச்சர் வேலுமணி பேசுகையில், ''பிளாஸ்டிக் பயன்பாட்டால், சுற்றுச்சூழல், நிலத்தடிநீர் என அனைத்திலும் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. பிளாஸ்டிக் மாற்று பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலுக்கு மாற வேண்டும்.

''பிளாஸ்டிக் மாற்றாக, வாழை இலை, பாக்கு மட்டை போன்றவற்றை மக்கள் பயன்படுத்த வேண்டும். இது மக்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதால் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு தர வேண்டும்,'' என்றார்.



■ கூட்டத்தில், உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி, சுற்றுசூழல் துறை அமைச்சர் கருப்பணன் மாணவர்களுக்கு துணிப்பைகளை வழங்கினர். அருகில் சுற்றுசூழல் மற்றும் வனத்துறை முதன்மை செயலர் ஷம்பு கல்லோலிகர்.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கருப்பணன் பேசுகையில்,'' மாசில்லா தமிழகம் உருவாக நிலம், நீர், காற்று ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும். உயிரினங்களுக்கு தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மாற்றுப் பொருட்களாக, மக்கும் பொருட்கள் உற்பத்தி தொழில் துவங்க மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்,'' என்றார்.

துணை சபாநாயகர் ஜெயராமன், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மை செயலர் ஷம்பு கல்லோலிகர், தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலர் சந்தோஷ் பாபு, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட கலெக்டர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

### 'ஸ்டெர்லைட்' மேல்முறையீடு!

அமைச்சர்கள் வேலுமணி, கருப்பணன் நிருபர்களிடம் கூறுகையில், 'ஸ்டெர்லைட் ஆலை திறப்பு விவகாரத்தில், உச்சநீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யவுள்ளோம். இந்த விஷயத்தில் முதல்வர் தெளிவாக உள்ளார். அரசை பொறுத்தவரை ஸ்டெர்லைட் ஆலை திறக்கப்படாது. சட்டரீதியாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்' என்றனர்.